சங்கீதங்கள் 103:13

ஆகாயத்தில் நின்று விழுகிற தண்ணீரால் பர்வதங்களை நனைக் கிறீர்; உம்முடைய கிருபைகளின் பலனாலே பூமி திருப்தியடையும்.

அருளப்பர் முதல் நிருபம் 3:1

நாம் சர்வேசுரனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்பட்டு, மெய்யாகவே அவருக்குப் பிள்ளைகளாயிருக்கும்படிக்கு எத்தன்மையான பரம அன்பைப் பிதாவானவர் நமக்குத் தந்தருளினாரென்று பாருங்கள். ஆகையால் உலகம் நம்மை அறியாதிருந்தால், அது அவரையும் அறியாதிருப்பதே அதற்குக் காரணம். (உரோ. 8:15.)

பழமொழியாகமம் 3:11-12

ஆண்டவருடைய கண்டிதத்தை என் மகனே! நீ தள்ளிவிடாதே; அவ ரால் கண்டிக்கப்படுகையிலுஞ் சோர்ந்து போகாதே (எபி.12:5; காட்சி.3:19). ஏனெனில், ஆண்டவர் தாம் சிநேகிக்கிறவனைக் கண்டிக்கிறார்; தகப்பன் தன் மகனில் சந்தோஷிப் பதுபோல் அவருஞ் சந்தோஷிக் கிறார்.

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 6:6

நீயோவென்றால் ஜெபம் செய் யும்போது உன் அறைக்குள் பிரவேசித் துக் கதவைச் சாத்தி அந்தரங்கத்தில் உன் பிதாவைப் பிரார்த்தித்துக்கொள். அப்போது அந்தரங்கத்தில் காண்கிற உன் பிதா உனக்குப் பலன் அளிப்பார். ௬ 6. அந்தரங்கத்தில்:- நாம் செய்கிற நற்கிரியைகளில் சிலவற்றை மனிதர் கண் முன்பாகத்தான் செய்யும்படியாய் வரும். ஆனால் அவைகளை மனிதர் புகழ்ச்சிக்காகச் செய்யாமல் சர்வேசுரனுக்குப் பிரியப்படவேணுமென்கிற கருத்தோடே செய்யவேண்டியது.

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 17:24

பிதாவே, உலக சிருஷ்டிப்புக்கு முன் நீர் என்னைச் சிநேகித்ததினாலே, நீர் எனக்குத் தந்தருளின மகிமையை நீர் எனக்குத் தந்தருளினவர்களும் காணும்படியாக, நான் இருக்கிற இடத் தில் அவர்களும் என்னோடிருக்க வேண்டுமென்று மனதாயிருக்கிறேன். (அரு. 12:26.)

அருளப்பர் முதல் நிருபம் 2:15

உலகத்தையும் உலகத்திலுள்ளவைகளையும் சிநேகியாதேயுங்கள். ஒருவன் உலகத்தைச் சிநேகித்தால், அவனிடத்தில் பிதாவின் சிநேகமிராது.

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 6:26

ஆகாயப் பட்சிகளை நோக்கிப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறது மில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சி யங்களில் குவிக்கிறதுமில்லை . ஆகிலும் அவைகளை உங்கள் பரம பிதா போஷித்து வருகிறாரே. அவைகளிலும் நீங்கள் மிகவும் மேன்மையுள்ளவர்கள் அல்லவோ?

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 10:28-30

நான் அவைகளுக்கு நித்திய ஷஜீவியத்தைக் கொடுக்கிறேன். அவைகள் என்றென்றைக்குஞ் சேதமாய்ப் போவது மில்லை, என் கைகளினின்று அவை களை ஒருவனும் பறித்துக்கொள்ளுவது மில்லை. (உபாக. 32:39.) என் பிதாவினால் எனக்குக் கொடுக்கப்பட்டது சர்வத்திலும் மேன்மையானதாய் இருக்கின்றது. என் பிதாவின் கையினின்று அதைப் பறித்துக் கொள்ள ஒருவனாலுங் கூடாது. நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார். (அரு. 8:19; 12:45; 14:9.)

பழமொழியாகமம் 15:5

மதிகேடன் தன் பிதாவின் கண்டனையை நகைக்கிறான்; ஆனால் கண்டனைகளைக் காக்கிற வன் மிக விவேகியாவான். நீதித் துவம் எவ்வளவு மிகுவோ அவ்வள வாக அதிக மனத் திடனுண்டாகும்; அக்கிரமிகளின் சிந்தனைகளோ வெனில் வேருடன் கலைக்கப்படும்.

பிலிப்பியர் 4:20

நம்முடைய பிதாவாகிய சர்வேசுரனுக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 14:23

சேசுநாதர் அவருக்கு மறுமொழியாக: ஒருவன் என்னைச் சிநேகித்தால், என் வாக்கியத்தை அநுசரிப்பான்; என் பிதாவும் அவனைச் சிநேகிப்பார். நாங்கள் அவனிடத்தில் வந்து அவனுக்குள் வாசம்பண்ணுவோம்.

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 1:12

யாரார் அவரை ஏற்றுக்கொண்டு, அவருடைய நாமத்தின்மேல் விசுவாச முள்ளவர்களானார்களோ, அவர்கள் தேவ புத்திரராகும்படி அவர்களுக்கு வல்லமையைக் கொடுத்தார். (உரோ. 8:14; கலாத். 3:26.)

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 10:29-31

ஒரு காசுக்கு இரண்டு அடைக் கலங் குருவிகள் விற்கப்படுகிறதல் லவோ? ஆயினும் அவைகளில்

ஒன்றா வது உங்கள் பிதாவின் சித்தமின்றித் தரையில் விழமாட்டாது. (லூக். 8:17.) உங்கள் சிரசின் ரோமங்களெல் லாம் எண்ணப்பட்டிருக்கின்றன. (அப். 27:34.) ஆதலால் அஞ்சாதிருங்கள்; அநே கம் அடைக்கலங் குருவிகளைவிட நீங்கள் மேலானவர்களாயிருக்கிறீர்கள்.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 12:32

சிறு மந்தையே, நீங்கள் பயப்படாதேயுங்கள்; ஏனெனில் உங்களுக்குத் தம்முடைய இராச்சியத்தைத் தரும்படி உங்கள் பிதாவுக்குச் சித்தமாயிற்று.

உரோமாபுரியார் 1 8:19

ஏனெனில் சர்வேசுரனுடைய பிள்ளைகள் வெளிப்படுங் காட்சியைக் காணப் படைப்புகளெல்லாம் ஆவலோடு காத்துக்கொண்டிருக்கின்றன.

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 14:6

சேசுநாதர் அவரை நோக்கி: வழியும், சத்தியமும், ஷஜீவனும் நானே. என் வழியாய் அல்லாதே பிதாவினிடத்தில் சேருகிறவன் ஒருவனுமில்லை.

இயாகப்பர் பொது நிருபம் 1:17

உத்தமமான எந்தக் கொடையும், பூரணமான எந்த வரமும் ஒளிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்குவதால், மேலாவிலிருந்து வருகின்றது. அவரிடத்தில் யாதொரு வேற்றுமையும், விகற்பத்தின் நிழலுமில்லை. (மத். 7:11.)

இசாயாஸ் ஆகமம் 9:6

ஏனெனில், ஒரு பாலன் நமக்குப் பிறந்தார், சுதன் நமக்கு அளிக்கப் பட்டார்; அவர் மீது தோள்மீது தமது அரசாட்சியது அடையாளத்தைக் கொண்டிருப்பார்; அவர் அதிசயர் எனவும், புத்திப் பிரபோதகர் எனவும், தேவர் எனவும், ஞகத்துவர் எனவும், எதிர்காலப் பிதாவெனவும், சமாதானப் பிரபு எனவும் அழைக் கப்படுவர்.

உரோமாபுரியார் 1 8:32

தமது சொந்தக் குமாரன்மேல் முதலாய் இரக்கமில்லாமல், நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர் மற்றெல்லாவற்றையும் அவரோடு நமக்குத் தானம் பண்ணாதிருப்பதெப்படி? (அரு. 3:16.)

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 14:13

நீங்கள் என் நாமத்தினாலே பிதாவை ஏதேது கேட்பீர்களோ, சுதனிடத்தில் பிதா மகிமைப்படும்பொருட்டு, நான் அதைச் செய்தருளுவேன். (மத். 7:7; மாற். 11:24; அரு. 16:23.)

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 14:21

என் கற்பனைகளைக் கைக்கொண்டு அவைகளை அநுசரிக்கிறவன் எவனோ, அவனே என்னைச் சிநேகிக்கிறவன். என்னைச் சிநேகிக்கிறவனோ என் பிதாவினால் சிநேகிக்கப்படுவான். நானும் அவனைச் சிநேகித்து, அவனுக்கு என்னைத்தானே வெளிப்படுத்துவேன் என்றார்.

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 26:53

நான் என் பிதாவை மன்றாடக் கூடாதென்றும், அவர் பன்னிரண்டு சேனைக்கதிகமான தேவதூதர்களை இக்ஷணமே என்னிடத்தில் அனுப்ப மாட்டாரென்றும் நினைக்கிறாயோ?

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 14:2

என் பிதாவின் விட்டிலே அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஏனெனில் உங்களுக்கு ஒரு ஸ்தலத்தை ஆயத்தஞ் செய்யப்போகிறேன். ழூ 2. அப்போஸ்தலர்களுக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட புண்ணியாத்துமாக்களுக்கும் மோட்சத்திலே நித்தியமாய் வாசஸ்தலம் தயாராயிருந்தாலும், கர்த்தர் பரலோகத்துக்கு எழுந்தருளும் வரையில் பரகதியின் வாசல் அடைபட்டிருந்ததால், அவர் அதைத் திறந்து, அவரவருடைய பேறுபலன்களுக்கு அளவாய் பேரின்ப மகிமையைத் தயாராக்குவாரென்பது இவ்வாக்கியத்தின் கருத்து.

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 1:18

சர்வேசுரனை ஒருவனும் ஒரு போதுங் கண்டதில்லை. பிதாவின் மடியிலிருக்கிற ஏக சுதனே அவரை வெளிப்படுத்தினார். (1 தீமோ. 6:16; 1 அரு. 4:12.)

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 6:17-18

நீயோ உபவாசமாயிருக்கும் போது உன் சிரத்தைத் தைலத்தால் பூசு, உன் முகத்தையும் கழுவு. உபவாசமாய் இருக்கிறாயென்று மனிதர்களுக்குத் தோன்றாமல் அந் தரங்கத்திலிருக்கிற உன் பிதாவுக்குத் தோன்றும்படி (அப்படிச்செய்). அப் போது அந்தரங்கத்தில் காண்கிற உன் பிதா உனக்குச் சம்பாவனையளிப்பார்.